மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 59/2017

பெயர் – முருகன் (வா.சா.1)

நாள் – 03.02.2023

7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சர்வே எண்.14/3 ல் ஏக்கர் 2 செண்ட் 36 மங்கத்தாயம்மாள் பாகத்திற்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். சர்வே எண்.14/1 ல் ஏக்கர் 3 செண்ட் 4 அய்யம்மாள் பாகத்திற்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். சர்வே எண்.14/2 நான் கிரையம் பெற்றதற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அரசை ஏமாற்றி நான் மோசடியாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.14/2 ஆனது அரசு ஆவணங்களில் பொதுப்பாதை என்றுதான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய இடம் ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.14/2 உட்பிரிவு செய்யப்பட்டதற்காக எனக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என சொல்லியுள்ள நிலையில் 2016ம் ஆண்டே சர்வே எண்.14/2 உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு அந்த விவரம் தெரியும் என்றாலும் ஏனெனில் 2016 ஆண்டு 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் 7ம் பிரதிவாதிக்கு தடையில்லா சான்று வழங்க கூடாது என ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றாலும் ஞாபகம் இல்லை. அரசாங்காம் ரோடு, ஓடை புறம்போக்கு, வண்டிப்பாதை ஆகியவைகளுக்கு 1985 ஆண்டே தனிதனியாக பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தில் வண்டிப்பாதையாக காண்பித்துள்ளது சர்வேஎண்.14, 15, 16, 35, 34, 33, 32 ஆகியவை வழியாக செல்கிறது என்றால் சரியல்ல. வண்டிப்பாதை இல்லை என்பதுதான் வழக்கு ஆகும். வா.சா.ஆ.8 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை 7,8 பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியுள்ளேன். நான் பொய்யாக 7,8 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 7,8 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் மீது நடவடிக்கை

எடுப்பதற்காகதான் அனுப்பியுள்ளளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வேஎண்.14/2 பற்றி எதுவும் தெரிவிக்காமல் உள்ளதால் வா.சா.ஆ.8 ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பிலும் சர்வே எண்.14/2 பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் சர்வேஎண்.14/2 பற்றி எதுவும் தெரிவிக்காமல் உள்ளதால் வா.சா.ஆ.12 ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணம் மூலமாக சர்வேஎண் 14/2 சர்வேயர் அளப்பதற்காக அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாதை இல்லை என்று அந்த மனுவை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. வா.சா.ஆ.13 ஆவணத்தில் பெறுநராக எனது பெயர் உள்ளதா என்றால் எனது பெயர் இல்லை. எனது அம்மா மற்றும் வாதியான எனது மகன் பெயரும் உள்ளது. எனது அம்மா மற்றும் மகனுக்காக சாட்சி அளிப்பதற்காக நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் நான் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 13 ஆவணங்களிலும் எனது பெயர் இல்லாத காரணத்தினால் எனது தகப்பனாரின் பெயர் மட்டுமே உள்ளதாலும் அந்த ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணமான மாண்பமை சென்னை உயர் நீதிமன்றமன்றத்தில் தாக்கல் செய்ததில் நான் தரப்பினரா என்றால் இல்லை எனது அப்பா அம்மா தரப்பினர்களாக உள்ளார்கள். வா.சா.ஆ.15 ஆவணமானது சர்வே எண்.14/2 விவசாய நிலம் என்பதால் தார் சாலை அமைக்கக்கூடாது என்று கோரி உள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 சம்பந்தப்பட்ட வழக்கானது 21.7.2017ம் தேதி 2ம் பிரதிவாதி 18.7.2017ம் தேதி கொடுத்த தார்சாலை அமைக்க எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற பதிலின் அடிப்படையில் இந்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சாட்சி தலையை மட்டும் அசைக்கிறார். பதில் எதுவும் சொல்லவில்லை. வா.சா.ஆ.18 ஆவணத்தில் எனது தாயார் தான் மனுதாரராக உள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணத்தில் நான் தரப்பினராக இல்லாத நிலையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது நிருபண உறுதிக்கூற்றில் 1,2 வாதிகள் சார்பாக ஆவணங்களை தாக்கல் செய்வதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த வா.சா.ஆ.19

ஆவணத்தில் சர்வே எண்.14/1, 14/3 என்று தான் உள்ளது என்றாலும் சர்வே எண். 14/2 இல்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தில் சர்வேஎண்.14/2 க்கு எதுவும் இல்லாத காரணத்தினால் அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. எனது பரிகாரத்தில் சர்வே எண். 14/2 ல் உள்ள பாதையை பிரதிவாதிகள் அனுபவிக்கக்கூடாது என்று கோரவில்லை என்றால் சரிதான். ஏனெனில் நான் பாதை இல்லை என்று தான் கூறுகிறேன். நான் கோரியுள்ள பரிகாரத்தில் தபசில் சொத்தில் 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ சட்டத்திற்கு புறம்பான வழிகளில் சரளைமண்ணோ, சரளைகற்களோ, அல்லது ஜல்லி கற்களையோ, பரப்பாமல் இருக்கும்படிக்கு நிர்ந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.26 ஆவணமான தனிவட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பில் இது தொடர்பாக ஆய்வு செய்ததில் மேற்படி தொழிற்சாலையில் இதுவரை வேலை ஆரம்பிக்கப்படவில்லை. தொழிற்சாலையின் கிழக்கு பக்கத்தில் விளைநிலங்கள் ஏதும் இல்லை. தொழிற்சாலையின் கிழக்கில் இருந்து பாதையாக சென்று ஓடையில் இணைந்து மீண்டும் பட்டா நிலங்கள் வழியாக பாதை செல்கிறது. மற்றொரு பாதை சங்கரபாண்டியாபுரம் மேல்நிலை பள்ளி மைதானத்தின் மூலம் பாதை ஏற்பட்டு தொழிற்சாலையின் மெயின் கதவின் அருகில் மேற்கு பக்கம் பாதைசென்று ஓடையுடன் இணைந்து மீண்டும் பட்டா நிலங்கள் வழியாக பாதை செல்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.27 ஆவணம் பெறப்பட்டுள்ள நிலையில் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக நான் தாக்கல்செய்துள்ள மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனுவை பார்த்தால்தான் எந்த சர்வே எண்ணில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ல் தொழிற்சாலை விதிமுறை ரத்து என்பதற்கான மனு எதையாது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த மனுவை பார்த்தால் தான் அதில் உள்ள விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.28 ல் 16.3.2019 ம் தேதி குறிப்பாணையில் 7 ம் பிரதிவாதி பட்டாசு தொழிற்சாலை கட்டுமான பொருட்களை தங்களது குடும்பத்திற்கு சொந்தமான புல எண்கள் வழியாக கொண்டுசெல்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். இந்த ஆவணத்தை பொறுத்து சர்வேஎண். 14/2 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில் வட்டாட்சியர் மற்றும் துணைவட்டாட்சியர் மீது நடவடிக்கை எடுக்கசொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 க்காக அனுப்பபபட்ட மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனுவில் உள்ள விவரங்களை பார்த்தால்தான் மனுவில் உள்ள விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.31 முதல் வா.சா.ஆ.33 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வேஎண்.14/2 வண்டிப்பாதை என்பதால் 7ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 35/2, 36/2 ஆகிய சொத்துக்களை தற்போதுவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு 7ம் பிரதிவாதிபொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனாரின் சொத்துக்கு வாரிசு என்று கேட்டுள்ளேன். இந்த வழக்கில் 1ம் வாதி யார் என்றால் நான் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளளேன். 2ம் வாதி யார் என்றால் தெரியாது. 4, 5 வாதிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமான விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.37 வரை ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வேஎண்.14/3 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது. சர்வேஎண்.14/1 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.14/1க்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால தாக்கல்செய்துள்ளேன். சர்வே எண்.14/2க்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.14/2 அரசு ஆவணத்தில் வண்டிப்பாதை என்று உள்ளது என்றால் மேற்கு புறத்தில் ஒரு ஓடை உள்ளது. அதுதான்

வண்டிப்பாதை என்று உள்ளது. சர்வே எண்.14/2 அரசு ஆவணத்தில் வண்டிப்பாதை என்று உள்ளது என்பதால் அந்த சர்வே எண் பொருத்து நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. அது வண்டிப்பாதை என தவறாக உள்ளது. எனது வழக்குரையில் பாரா 4ல் இயற்கை நெறியின்படியும் வண்டிப்பாதை உள்ள சொத்தும் வாதிகளுக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா வழங்க கூடாது என்று சொல்லியுள்ளேன. . எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண். 14/2 வழியாகத்தான் சேர்வைக்காரன்பட்டி மக்கள் 7ம் பிரதிவாதி தொழிற்சாலைக்கு சென்றுவருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.35/2,மற்றும் 35/6 அந்த வண்டிப்பாதையில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.35/2,மற்றும் 35/6 ஆகியவை பட்டாசு ஆலை என்று உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாசு ஆலையில் சுமார் 60 பேர்கள் வேலைபார்ப்பார்கள் என்றால் சுமார் 150 பேர்களுக்கு மேல் வேலை பார்ப்பார்கள். பட்டாசு ஆலை எத்தனை காலமாக அங்கு உள்ளது என்றால் 4 வருடமாக உள்ளது. நான்கு வருடமாக அந்த வண்டிப்பாதை வழியாக மக்கள் போய் வருகிறார்கள் என்றால் சரிதான். நானும் தடங்கள் செய்கிறேன். 7ம் பிரதிவாதி 2016ம் ஆண்டு தடையில்லா சான்று வாங்கியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.14/2 எப்போது உட.பிரிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. சர்வே எண்.14/2 ஆனது 1985 ஆண்டே உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றாலும் அதனால் சர்வே எண்.14/2 பொருத்து நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வ.சா.ஆ.12 ஆவணமானது வழக்கறிஞர் மூலம் கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். அந்த புகாரில் 14/1 மற்றும் 14/3 மட்டும் சொல்லியுள்ளேன் என்றாலும், 14/2 பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.12 ஆவனமானது இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாது என்றால் சரியல்ல. இந்த பிரச்சினை சம்பந்தமாக மாண்பமை மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் என்னால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த ரிட் மனுவில் சர்வே எண்.35/2, 35/6 மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்துவிட்டது என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் சர்வே எண்.14/2 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7

ஆவணத்தில் வண்டிப்பாதை என்பது புள்ளிகள் வைத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வண்டிப்பாதை இல்லை. இந்த வழக்கில் 7 ம் பிரதிவாதி யார் என்றால் தெரியாது. சர்வே எண்.14/2 சம்பந்தமாக அளப்பதற்கு வந்தார்கள் என்றால் சரிதான். வெம்பக்கோட்டை சர்வேயர் வந்தார். அளக்கவிடாமல் பாதை இல்லை என நான் தாவா செய்தேன். மீண்டும் 23.1.2017 ம் தேதி மேல்முறையீடு செய்து அளக்கவந்தார்கள் அப்போதும் நான் அளக்கவிடவில்லை. அந்த சொத்தை அளப்பதற்காக எனக்கு அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோன என்றால் இல்லை. நான் 2 ம் பிரதிவாதியான மாவட்ட வருவாய் அலுவலருக்கு மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த மனுவுடன் சர்வேஎண்.14/2 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணம் சம்பந்தமாக எனது நிருபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 11.5.2017 ல் 4 ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவிற்கு உரிய வழிமுறையில் ஓ.மு.அ.3/1485/17 ன் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த நடவடிக்கை குறித்த ஆவணமான வா.சா.ஆ.18 நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆவணமாக கொடுத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கவில்லை. சர்வே எண்.14/1, 14/3 ஆகியவற்றில் ராமசந்திர ஆசாரிக்கு பட்டா இருந்தது என்றாலும், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா இருந்தது அதனை தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலம் பாரா 19 ல் 1 முதல் 6 பிரதிவாதில் தொழிற்சாலை விதிகளை மீறி உயர் அதிகாரிகளுக்கும் அற்ப தொகையை கையூட்டாக பெற்றுக்கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 6 பிரதிவாதிகள் நான் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் என்றாலும் அதனால் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. சர்வே எண்.14/2 எனக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்பதால் தான் இந்த வழக்கில் நான் முன்னுக்குப்பின் முறனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

எனது பிராதில் 2 வது பிரகாரம் ஆன தாவா பாதையை விவசாய பணிகளை தவிர பட்டாசு தொழிற்சாலைக்காகவோ அங்கு வேறு தொழிற்ச்சாலைக்காவோ 7 வது 8 வது பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ வகையாட்களோ பயன்படுத்தாமல் இருக்கும்படி தடையூறுத்துக் கட்டளை கோரியுள்ளேன் என்றால் சரிதான். மாண்பமை உயர்நீதி மன்றத்தில் தாவா பாதையில் தார் ரோடு அமைக்கக்கூடாது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் தாவா பாதையில் தார் ரோடு அமைக்கப்போவதில்லை என அரசு அதிகாரிகள் சொன்னதால் முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா பாதை அரசு ஆவணங்களில் சர்வே எண்.14/2 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை அதில் பாதை எதுவுமில்லை. தாவா வண்டிபாதையானது சர்வே எண்.13, 12, 14, 15, 16, 17, 35 வழியாக சென்று கடைசியாக மங்கம்மாள் கோவிலில் முடிவடைகிறது என்றால் சரியல்ல. அது வேறு வழியாக செல்கிறது. தாவா வண்டிப்பாதைக்கு மேற்புறத்திலும் கிழக்குபுறத்திலும் உள்ள நில உடமையாளர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். 8 ம் பிரதிவாதி 7 ம் பிரதிவாதிக்கு விற்ற இடங்கள் போக மீதமுள்ள இடத்திற்காக தாவா பாதையை வண்டிப்பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மீண்டும் ஆணையர் நியமனம் செய்யக் கோரி மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா பாதையை வண்டிப்பாதை என்று குறிப்பிட்டுள்ளரா என்றால் சரிதான். ஆனால் அது தவறு. அதுபற்றி நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் இல்லை. தாவா வண்டிப்பாதை சர்வே எண்.14/2 ன் வடபுறம் தொடர்ச்சியாக 12/4 என்றும் தென்புறத்தில் 15/5 வண்டிப்பாதை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லும் ஓடை என்னுடைய தாய் தகப்பனாரி சொத்திற்கு மேற்கு பக்கம் கடையில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.14/1 க்கு மேற்புறத்தில் ஓடை என்று நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.14/1 க்கு கிழக்குபுறத்தில் உள்ள வண்டிப்பாதையானது சர்வே எண்.14/2 வண்டிப்பாதை என்று நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.14/2 க்கு கிழக்குபுறத்தில் எனது தாயருக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே

எண்.14/3 ல் உள்ளது என்றால் சரிதான். வண்டிப்பாதை என்பது மரபு வழி உரிமை என்றாலும் அதனை பொறுத்து நான் தனி வழக்காக தாக்கல் செய்ய முடியாது என்றாலும் அதன் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.